## ராச ராச பிதா மைந்த தேகலாவுசதா

ராச ராச பிதா மைந்த தேகலாவுசதா நந்த
இயேசு நாயகனார்சொந்த மேசியா நந்தனே!

ஜெக தீசுரேசுரன் சுகநேசமீசுரன் மக

மாசிலா மணியே மந்த்ர ஆசிலா அணியே சுந்த்ர
நேசமே பணியே, தந்திர மோசனே தணியே
நிறைவான காந்தனே! இறையான சாந்தனே

ஆதியந்த மில்லான் அந்த மாதினுந்தியிலே முந்த
வேத பந்தனமாய் வந்த பாதம் வந்தனமே
பத ஆமனாமனா! சுதனாமனாமனா! சித

மேன்மையாசனனே நன்மை மேவுபோசனனே தொன்மை
பான்மை வாசனனே புன்மை பாவ மோசனனே
கிருபா கரா நரா! சர்வேசுரா பரா திரு